# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சைபரீட்சை 2023

ஆண்டு: 5 திகதி: 25.11.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதிசெல்வநாயககி சிவசுப்பிரமணியம்
உதவிஆசிரியர்: செல்வி காவிகா சித்திவிநாயகர்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியை வாசித்து, அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**சோம்பல் மிகக் கெடுதி பாப்பா**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குழந்தைகளுக்காகப் பாடிய பாட்டு ‘‘பாப்பாப் பாட்டு’’. அப்பாடல்களில் அவர் சின்னஞ் சிறுவர்களுக்கான பல அறிவுரைகளை கூறுகிறார். அதில் மிகச் சிறந்தது ‘‘சோம்பல் மிகக் கெடுதி பாப்பா’’.

சிறுவர் கல்வியைக் கண் போல் கருதிக் கற்க வேண்டும். சில சிறுவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லமாட்டார்கள். ஆசிரியர் படிப்பிக்கும் போது கவனம் செலுத்தமாட்டடார்கள். பாடசாலையில் படித்த பாடங்களைத் திருப்பிப் படியாது காலங் கடத்துவர். இப்படியான சேம்பல் உள்ளவர்கள் கல்வியில் முன்னேற முடியாது அறிவைப் பெற முடியாது. எதிர் காலத்தில் மூடர்களாக அறிவு இல்லாதவர்களாக வாழ்வர். அதனால் ‘‘சோம்பல் மிகக் கெடுதி’’.

ஓய்வு நேரங்களில் சிறுவர்களுக்கான நூல்களை வாசித்தல் வேண்டும். மகாத்மாகாந்தி சுவாமி விவேகானந்தர், அரிச்சந்திரன், ஆபிரகாம் லிங்கன் முதலியோருடைய வரலாறுகளை வாசித்து அறிதல் வேண்டும். அதனால் அன்பு, இரக்கம், உண்மை பேசுதல் முதலிய நற்குணங்கள் வளரும். சோம்பலுள்ளவர்களாக இருந்தால் நல்ல குணங்களை வளர்க்கமுடியாது. ஆகவே ‘‘சோம்பல் மிகக் கெடுதி’’, ‘‘மாலை முழுவதும் விளையாட்டு’’ இதனால் ஓடி ஆடி விளையாடுவதால் வியர்வை வெளியேறும் இரத்த ஓட்டம் (blood circulation) கூடும், உடல் உறுதி பெறும். விளையாட விரும்பாத சிறுவர்கள் பலம் அற்றவர்கள் ஆவர். ஆகவே ‘‘சோம்பல் மிகக் கெடுதி’’.

ஆகவே சிறுவர்கள் தேனீக்கள்(Honey bees) போன்று சுறுசுறுப்பாகவும் முயற்சியும் உடையவர்களாகவும் விளங்கவேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் சிறுவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்குவார்கள் என்பது உண்மை.

1. பாப்பாப்பாட்டைப் பாடியவர் யார்?

________________________________________________

2. பாரதியார் கூறும் அறிவுரைகள் எவை?

________________________________________________

3. ‘‘சோம்பல் மிகக் கெடுதி’’. ஏன் அப்படிக் கூறினார்?

________________________________________________

4. சிறுவர்கள் ஓய்வு நேரங்களில் படிக்கக்கூடிய புத்தகங்கள் யாவை?

________________________________________________

5. சிறுவர்கள் ஏன் தேனீக்கள் போன்று இருக்க வேண்டும்?

________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

2.1 கீழ்காணும் வினைச் சொற்களை காலங்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக. (15 புள்ளிகள்)

| | இறந்தகாலம்(Past tense) | நிகழ்காலம்(Present) | எதிர்காலம்(Future) |
|---|---|---|---|
| உதாரணம்: ஓடு | ஓடினான் | ஓடுகிறான் | ஓடுவான் |
| எடு | | | |
| செல் | | | |
| வா | | | |
| பார் | | | |
| சிரி | | | |

2.2 பின்வரும் சொற்றொடரை பிரித்து எழுதுக. (5 புள்ளிகள்)

1. மரவேர் - ____________ + __________
2. நாட்டுப்பற்று - _______________+ _________
3. ஆற்றுநீர் - ______________ + __________
4. கடற்கரை - ______________ + __________
5. கற்பாறை - ______________ + ___________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

3.1 மரம் மரங்கள் போல பன்மையில்(plurarl) மாற்றி எழுதுக. (5 புள்ளிகள்)

1. பூ __________________
2. குழந்தை __________________
3. வீரன் __________________
4. மேசை __________________
5. பசு __________________

3.2 பின்வரும் சொற்களை பொருத்தமான இடங்களில் எழுதுக.(5 புள்ளிகள்)

(ஆண்டு, மணம், ஆறு, மாலை, தட்டு)

1. பிறர் அறைக்குள் போவதற்கு முன் கதவை ______________
2. மல்லிகை மலர் ___________ கமழ்கிறது.
3. மலையில் ______________ உற்பத்தியாகும்.
4. மாணவர்கள் ___________ பொழுதில் பந்து விளையாடினார்கள்.
5. சென்ற _______________அருள் நான்காம் வகுப்பு படித்தான்.

| வினா இல | 4 | புள்ளிகள் 5 | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

4.1 பின்வரும் சொற்களை பாவித்து பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.

1. படி ____________________________________________

2. கரை ____________________________________________

3. ஊர் ____________________________________________

4. கலை ____________________________________________

5. நாடு ____________________________________________

4.2 தமிழிற் தருக(5 புள்ளிகள்)

1. He is my teacher.____________________________________________

2. That is my book.____________________________________________

3. This is my room.____________________________________________


4. Whose book is this?____________________________________________

5. Who’s house is this?____________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **8** |

உமது தாத்தா, பாட்டி தாய்நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நீர் வாழும் நாட்டில் அவுஸ்திரேலியாவில் நிலவும் பருவ காலங்கள் பற்றி எழுதி, அதில் இலைதுளிர் காலம் பற்றி விரிவாக எழுதுக.


குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. Four seasons(Spring, Summer, Autumn & Winter)(20 புள்ளிகள்)




| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 15 வசனங்களுக்கு குறையாது எழுதுக. குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

(i) விளையாட்டுகள்



(ii) என் பாடசாலை



என் பாடசாலை
சுத்தம்
மாணவர்கள்
வகுப்புகள்
நூல்நிலையம்
ஆசிரியர் எண்ணிக்கை
அறைகள்
பெயர்
அழகு
சிறியது/பெரியது
விளையாட்டு வசதிகள்

(iii) நீர் அறிந்த, தமிழ் வளர்த்த பெரியார் ஒருவரைப் பற்றி எழுதுக.

(பாரதியார், திருவள்ளுவர், விபுலானந்த அடிகள்)